பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 19 வெள்ளிக்கிழமை (01-05-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 155

# இலட்சியத்தில் உறுதி தளரமாட்டோம் என வீரசபதம் செய்து கொள்வோம்



தலைவர் பிரபா

## தலைவர் பிரபா மே தினச் செய்தி

யாழ்ப்பாணம், மே 1

பாட்டாளி வர்க்கத்தின் எழுச்சி தினமாகிய இன்று நாம் ஒரு விதி செய்து கொள்வோம். எந்தவித சவால்களை எதிர் கொண்ட போதும், எமது இலட்சியப் பயணத்தில் உறுதி தளரமாட்டோம் என வீர சபதம் செய்வோம்.

இவ்வாறு தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மே தினத்தை யொட்டிய தமது செய்தியில் தெரிவித்துள்ளார்.

தமிழ்—சிங்கள பாட்டாளி மக்கள் மத்தியில் வர்க்க ஒற்றுமை ஏற்படுவதானால், சிங்களத் தொழிலாளர் வர்க்கம் தமிழரின் தன்னாட்சி உரிமையை அங்கீகரிக்க வேண்டும். தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

தலைவர் பிரபாகரன் தமது மேதினச் செய்தியில் தெரிவித்திருப்பதாவது:-

எனது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய தமிழீழ மக்களே,

இன்று தொழிலாளர் நாள்; உலகப் பாட்டாளிகளின் எழுச்சி நாள் உழைக்கும் மக்களின்; ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் புரட்சி நாள்.

உழைக்கும் மக்களின் உழைப்புசக்தியே ஒரு தேசத்தின் ஜீவாதார சக்தி. உழைப்பவனே பொருளுலகத்தைப் படைக்கிறான்; மனித வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கிறான். உழைக்கும் கரங்களே மனித வாழ்க்கையை இயக்கும் கரங்கள்.

இந்த உழைக்கும் மனிதர்களுக்கு நாம் இன்று விழா எடுக்கின்றோம்.

ஒரு யுத்த சூழ்நிலையில், எதிரியின் படையெடுப்புக்கு மத்தியில், பெரியதொரு பொருளாதாரச் சுமையின் அழுத்தங்களைத் தாங்கி நின்று நாம் பாட்டாளிகள் தினத்தைக் கொண்டாடுகின்றோம்

தமிழீழப் பாட்டாளி வர்க்கமானது என்றுமில்லாத பெரும் நெருக்கடியைச் சந்தித்து நிற்கிறது. இனவாத அரசின் ஈவிரக்கமற்ற கொள்கையால் உழைத்து வாழும் மக்கள் ஒரு ஜீவமரண போராட்டத்தை எதிர் கொண்டு நிற்கின்றார்கள். எமது மக்களின் உழைக்கும் கரங்களைத் துண்டித்துவிட்டு அவர்களின் நாளாந்த வாழ்க்கையை நரகமாக்கிவிட எதிரி

[5 ஆம் பக்கம் பார்க்க]

## வானொலியில் தலைவர் பிரபா

யாழ்ப்பாணம், மே 1

மேதினத்தை முன்னிட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவரும், தமிழின தேசியத் தலைவருமான திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன், இன்று காலை 8 மணிக்கு தமிழீழ வானொலியில் உரையாற்றுகிறார். (ஓ)

### உழைக்கும் மக்களின் எழுச்சி தினம்

# யாழ்ப்பாணத்தில் இன்று பேரணியும், கூட்டமும்

யாழ்ப்பாணம், மே 1

உழைக்கும் மக்களின் எழுச்சி நாளான இன்று யாழ்ப்பாணத்தில் பேரணியும் பிரமாண்டமான கூட்டமும் நடைபெறவுள்ளன.

மருதனார் மடத்தில் இருந்து ஆரம்பமாகும் பேரணி யாழ். பல்கலைக் கழகத்தில் முடிவடையும். பேரணியில் வரலாறு காணாத வகையில் மக்கள் கடலென திரண்டு வந்து கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

**பேரணி வழி**

பேரணி பி. ப. 2 மணிக்கு மருதனார்மடம் சந்தியிலிருந்து ''பாண்ட்'' வாத்திய இசையுடன் ஆரப்பமாகி காங்கேசன்துறை வீதியூடாக நாச்சிமார் கோவிலடியை அடைந்து, பின்பு இராமநாதன் வீதியூடாக கலட்டிச் சந்தியால் பிறவுண் வீதி, தொழில்நுட்பக் கல்லூரி முன்பாக உள்ள பாதை வழியாகச் சென்று யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தை — கூட்ட மைதானத்தை அடையும்—

அதேசமயம் மருதனார்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மே நாள் விழாவுக்கு அணிதிரள வேண்டுகோள்

யாழ்ப்பாணம், மே 1

இன்று நடைபெறும் மே தினப் பேரணியிலும், கூட்டத்திலும் அணி திரண்டு கலந்து கொள்ளுமாறு, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவு, மக்களைக் கேட்டுள்ளது.

தமிழீழத்தில் இதுவரை நடைபெற்ற மே தின விழாக்கள், தமிழர்களின் போராட்ட — அரசியல் — வளர்ச்சியை சர்வதேச அரங்கில் எடுத்துக் காட்டியுள்ளன—

இன்றைய மே தின விழா ''ஒடுக்கப்பட்ட தேச மக்களே ஒன்றுபடுங்கள்'' என்ற கோஷத்தை முன் வைத்து நடைபெறுகிறது— என்றும் த. வி. பு. அரசியற் பிரிவு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [அ]

### முச்சந்தி முரளி



அப்ப இன்டைக்கு எழுச்சி யான ... கலாம்...

## இந்திய மீனவர் மீது ஸ்ரீலங்கா கடற்படை தாக்குதல்

சென்னை, மே. 1

இராமேஸ்வரத்தில் இருந்து கடந்த செவ்வாய்க்கிழமை காலை இயந்திரப் படகின் மூலம் மீன் பிடிக்கச் சென்ற ஐந்து இந்திய மீனவர்கள் கச்சதீவுக்கு அருகே ஸ்ரீலங்கா கடற்படையினரால் தாக்கப் பட்டனர் என்று கூறப்படுகின்றது.

## உயிலங் குளத்தில் மோதல் நேற்றும் தொடர்ந்தது

மன்னார் உயிலங்குளத்தில் நேற்றும் மோதல்கள் தொடர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

படையினர் முன்னேற எடுக்கும் முயற்சிகளை, விடுதலைப் புலிகள் போராளிகள் தீரமுடன் முறியடித்து வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

இதேசமயம், வவுனியா, செட்டிகுளம் முகாம் இராணுவத்தினரும் மன்னார் வீதி வழியாக முன்னேற முயன்று வருகின்றனர் என்றும்—

அவர்களை வழிமறித்து விடுதலைப் புலிகள் நடத்தி வரும் தாக்குதல்களினால் இராணுவத் தரப்புக்கு பலத்த இழப்புக்கள் ஏற்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது

பிந்திக் கிடைத்த செய்திகளின் படி 30 கிராமங்களில் இருந்து 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் இடம் பெயர்ந்து மடு அகதி முகாமில் தஞ்சமடைந்துள்ளனர் என்று தெரியவந்தது.

அங்கு பெரும் நெருக்கடியும், உணவு மற்றும் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் அறியவந்தது.

## முஸ்லிம் பொலீஸாரே தமிழரைக்கொலைசெய்தனர்

### படை அதிகாரிகள் ஆராய்கின்றனர்

கொழும்பு, மே 1

பொலன்னறுவ மாவட்டத்தில் இரு கிராமங்களில் தமிழர்களை படுகொலை செய்தவர்கள் உள்ளூர் முஸ்லிம் பொலீஸாரும், ஊர்காவல் படையினரும் என்று தற்பொழுது தெரியவந்துள்ளதாக பி. பி. ஸி. நேற்று அறிவித்தது.

இவ்விடயம் குறித்து உயர் படை அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர் என்றும் —

இந்த மாவட்டத்தில் இடம் பெற்ற உயிர் கொலைகள் தொடர்பாக நீதி விசாரணை நடத்த அமைச்சர்களில் சிலரும் இராணுவ உயர் அதிகாரிகளும் அங்கு விரைந்துள்ளனர் என்றும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. [ஓ-10]

# இராணுவ காவலரண் மீது தச்சன்காட்டில் தாக்குதல்!

### படையினர் இழப்புகளுடன் தப்பி ஓட்டம்

கீரிமலை, தச்சன்காட்டில் உள்ள இராணுவ காவல் அரண் ஒன்றின் மீது நேற்று அதிகாலை ஒரு மணியளவில் விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதலை நடத்தினர்.

சுமார் 30 நிமிடங்கள் நீடித்த இந்தத் தாக்குதலின் போது இராணுவ தளபாடங்கள் பலவும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

விடுதலைப்புலிகள் நடத்திய திடீர் தாக்குதலினால் நிலை குலைந்த படையினர் பலத்த இழப்புகளுடன் முகாம் நோக்கி பின்வாங்கி ஓடினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

புலிகள் கைப்பற்றிய இராணுவ தளபாடங்கள் வருமாறு:-

ரி 56 ரகத் துப்பாக்கி - 1, ரவைக்கூடுகள் 06, ஏ. கே. எல். எம். ஜி. ரம் ரவைக்கூடு - 1, நடுத்தர ரவைகள் - 800, தொடர் ரவைகள் - 500, உட்பட மேலும் பல இராணுவ தளபாடங்கள். (ஓ-15)

## 4 வேங்கைகள் களப்பலி!

தச்சன்காட்டில் நேற்று அதிகாலை நடந்த தாக்குதலின் போது வீரவேங்கைகள் நால்வர் களப்பலியாகினர்.

கப்டன் செந்தில் [செல்லத்துரை ஈஸ்வரன் - சொக்குவில் கிழக்கு], கப்டன் அறவாணன் அல்லது தவம் [வேலாயுதபிள்ளை தவக்குமார் - சாவகச்சேரி], 2 ஆம் லெப்டினன்ட் கருவண்ணன் [கனகலிங்கம் கருணதாஸ் - யாழ்ப்பாணம்], வீரவேங்கை நிலன் [சுந்தரலிங்கம் சசிலிங்கம் - நீர்வேலி] ஆகியோரே களப்பலியானவர்கள் ஆவர்.

இவர்களது புகழுடல்கள் நேற்று மாலை ஆனைப்பந்தியில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன. அங்கு விடுதலைப் புலிகள் பிரமுகர்களும் மற்றும் பொதுமக்கள் பலரும் தமது அஞ்சலியைச் செலுத்தினர். [ஓ-15]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அப்பியாசக் கொப்பிகள், C.R கொப்பிகள் மலிவு விலையில் விற்பனையாகின்றன. மண்டேலா புத்தகசாலை, இல. 2, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம், யாழ்ப்பாணம். அரஸ் புத்தக நிலையம், இல. 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். [20631]

பாவித்த நல்ல நிலையில் உள்ள கதவுகள், யன்னல்கள் (முதிரை, வேம்பு) விற்பனைக்குண்டு. அளவு 6 அடி x 18 அங். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி, ந. கேதாரன், இல 10, இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடம். [20796]

### மணமகன் தேவை

33 வயது நிரம்பிய பரணி, 4 இல் செவ்வாய், 34/16 கிரக பாவமுள்ள மணப்பெண்ணுக்கு மணமகன் தேவை. தொழில் முக்கியமல்ல. இருவரையும் கனடாவுக்கு அனுப்ப முடியும். சீதனம் கொடுக்கப்படும். ABCDE விவாகப் பொருத்துனர், 20, கண்டி வீதி, சுண்டிக்குளி. [20778]

### திருமண சேவை

வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் சகல துறைகளிலுமுள்ள ஆண்கள் பெண்களின் ஜாதகங்கள் எம்மிடம் உண்டு. விருப்பத்திற்கு ஏற்ப பொருத்தம் பார்த்து நிறைவேற்றி வைக்கப்படும். செ. விஜயரத்தினம், தவாளி கிழக்கு, மானிப்பாய். [20601]

### இலவச திருமண சேவை

வயது 37, பூசம், செவ்வாய் கிரகபாவம் அற்ற ஆசிரியைக்கு ஏற்ற மணமகன் தேவை. தகுந்த சீதனம் வழங்கப்படும் அரச சுய தொழில் புரிவோர் விரும்பத்தக்கது. து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [4805]

35 வயது, குருகுலம் இந்து, திருவாதிரை, செவ்வாய் 12, ஆசிரியருக்கு, அரச சேவையாளரும், 38 வயது, சதயம் மணப்பெண்ணுக்கு மணமகனும் தேவை. தொடர்பு: ஞாயிறு காலையில். து: விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [4700]

வயது 31, திருவாதிரை 3, அரச லிகிதர், பாவம் 20, சைவ போசனம் பெண்ணுக்கு ஏற்ற மணமகன் தேவை. விண்ணப்பங்கள் ஏற்கப்படும். தொடர்பு ஞாயிறு காலையில். து விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம் [4803]

### புலமைப் பரிசில்

அரசாங்கத்தால் 26-4-92 (ஞாயிறு) நடத்தப்பட்ட பரீட்சை வினாத்தாள்கள் விடைகளுடன் விற்பனையாகின்றன. பாடசாலைகளுக்கும், தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் விசேட கழிவுண்டு. பரீட்சைப் பகுதி, Bond கல்வி நிறுவனம், யாழ்ப்பாணம். [4812]

### மணமகள் தேவை

ஜேர்மனியில் வேலை செய்யும் 33 வயது, செவ்வாய் குற்றமில்லை. அனுசம் முதலாம் பாதம். பெற்றோர் மணமகளை தேடுகிறார்கள். சகோதரர்கள், இனத்தவர்கள் ஜேர்மனியில் இருப்பின் விரும்பத்தக்கது. S. ராஜும் வாசிகசாலை அருகாமை, திருநெல்வேலிச் சந்தி. [20794]

### மணப்பெண்கள் தேவை

யாழ். இந்து குற்றமுள்ள 43, 38 வயது வர்த்தகர்களுக்கும், குற்றமற்ற 37 வயது வர்த்தகருக்கும் தேவை. எம்மிடம் மணமக்கள் பலர் இருக்கிறார்கள். மங்கள ஏஜன்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [20763]

### இலவசம்

துர்க்கா, ஜெயந்தி பத்திகளின் வெற்றுப் பைக்கட்டுகளை எமது கிளைகளிலோ அல்லது எமது விற்பனைப் பிரதிநிதிகளிடமோ கொடுத்து அதற்குரிய இலவசப் பொருள்களை பெற்றுக் கொள்ளுங்கள். அண்ணா தொழிலகம், இணுவில். (சி-2241)

### சோதிட மாந்திரீகம்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள். "சக்தி சரவணா" 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக) தினசரி பகல் 9 மணி தொடக்கம் 3 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. [4813]

## தேவை

இணுவிலில் இயங்கி வரும் ஆடைகள் உற்பத்திசெய்யும் தொழிற்சாலைக்கு துணி வெட்டுபவர் (பெண் - கட்டர்) தேவை.

பெண்களின், சிறுவர்களின் நவீன ஆடைகள் தயாரிப்பதில் அனுபவம் உள்ளவராகவும், தையற்காரராகவும் இருத்தல் வேண்டும்.

நற்சாட்சிப் பத்திரங்களுடன் 10-05-92 இற்கு முன் விண்ணப்பிக்கவும். C/o 402, நாவலர் வீதி, உதயன். [20780]

## மக்கள் நலன் காக்கும் பிரிவு

## பொது அறிவித்தல்

இது காறும் கோப்பாய் பிரதேசத்தில் இயங்கி வந்த ம. ந. கா. பிரிவு கோப்பாய் பிரதேசத்திற்கு வெளியேயும் தனது சேவையினை விரிவாக்கும் நோக்கத்துடன் புதிய யாப்பு விதியை அங்கீகரித்து இதற்கான தலைமைச் சபை ஒன்றையும் 29-01-1992 இல் அங்குரார்ப்பணம் செய்துவைத்துள்ளது.

25-04-1992 இல் நிறைவேற்றப்பட்ட புதிய யாப்பு விதியின் பிரகாரம், ம. ந. கா. பிரிவின் ஆரம்பகால உறுப்பினர்கள் வருடாந்தம் தொடர்ந்து வருடச் சந்தா ஒன்றினைச் செலுத்துவதன் மூலம் தலைமைச் சபை உறுப்பினர்களாக்கப்படுகின்றனர். இவ் வருடச் சந்தா இவ் ஆண்டுக்கென செலுத்தப்படும் முடிவுத் திகதி 08-05-1992 ஆகும்.

மேலதிக விவரங்களுக்கு பருத்தித்துறை வீதி, இருபாலைச் சந்தி, கோப்பாயில் அமைந்துள்ள எமது தலைமையலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்.

நன்றி:

மக்கள் நலன் காக்கும் பிரிவு.

01-05-1992. [20797]

# பாரதிதாசன் கல்வி நிறுவனம்

## (BECON)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## A/L 92 மீட்டல் வினா-விடை வகுப்பு

★ பொருளியல் ★

S வரதராஜன் B.A (Hons)

ஆரம்பம்:

பிரிவு I 02-05-1992 சனி 7-00 a.m

சனி, ஞாயிறு 7 00 — 8 00 a m

பிரிவு II 05-05-1992 செவ்வாய் 3-00 p.m

செவ்வாய், வியாழன் 3-00 — 4-00 p m

குறிப்பு: எமது நிறுவன மாணவர்களுக்கு இவ் வகுப்பு இலவசம்; ஏனைய மாணவர்களுக்கு குறிப்பிட்டளவு இடமே இருப்பதனால் பெயர்களை முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளவும். [சி-2249]

# 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 05 — 07 — 1950

மறைவு: 01 — 05 — 1977

## குமரையா தேவராஜன்

புனிதமான ஒரு படைப்பு - பூ
பூப்போல் பூமியில் மலர்ந்தாய்
பூப்போல் எம்மைக் கவர்ந்தாய்
பூப்போல் உடனே மடிந்தாய்
பூப்போல் உன் நினைவு புனிதமானதே!

மனைவி, பிள்ளைகள், உறவினர்.

இல. 28, தக்கா ஒழுங்கை, கண்டிக்குளி, யாழ்ப்பாணம். [20...]

# எம்மிரு தெய்வங்கள்





செல்வன்

## நடராஜா குணவதன்

இவ்வுலகில்: 1973 — 06 — 20

அவ்வுலகில்: 1986 — 05 — 01

திதி: 1992 — 04 — 25

திருமதி

## நல்லம்மா ஆறுமுகம்

அன்னையிடம்: 1904 — 12 — 26

ஆண்டவனிடம்: 1986 — 05 — 19

திதி: 1992 — 06 — 11

ஆண்டுகள் ஆறானாலும், ஆறாது எம் துயரம், அணையாது உங்கள் நினைவு
நாம் மரணிக்காமல் மரணிக்கிறோம், இது தான் எம் நியதியா?
அம்பலந் தரையான் தந்த அருமருந்து நீயன்றோ?
தீர்க்கதரிசியே! நீ தான் சொன்னாய், மறந்துவிட்டாயோ!

தம்பி!

உன் A/L பரீட்சை முடிவுற்ற வேளையிது,
உன் இலட்சியத்தை நிறைவாக்கி,
எம் குடும்ப இலட்சியத்தை நிலைநாட்டுவாய்,
என நாம் எதிர்பார்த்த வேளையது......
இப்படி எத்தனை கற்பனைகள் ....... உன்மேல்
பரம்பரைக் குலவிளக்கே! எல்லாமே நீயன்றோ!

அம்மம்மா!

பெருநிலை அடைந்து விட்ட எம் தெய்வமே!
அனுபவசாலி, அம்மம்மா - நல்லம்மா
உன்னுயிர்ப் பேரனை!
குண-குன்றாம், அறிவுக்குஞ்சன் குணவதனை
எம்மிடம் தராயோ?
எம்மில்லம், அன்று போல், என்றும் ஒளி வீசிட
உங்களை நினைந்துருகி வாழும்:

அப்பா, அம்மா,
அக்காமார், உறவினர்கள்,
நண்பர்கள், ஆசிரியர்கள்.

மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

Dr. V. S. நடராஜா, சண்டிலிப்பாய். [4809]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கதிரமலை சிவன் தேவஸ்தான
# தேர்த் திருவிழா சிறப்பிதழ்


தேருரும் சிவன்
பதம் போற்றி!

பாக்கி என்டபிறைஸ்
T. V. டெக், கசட்,
றேடியோ,
திருத்துபவர்கள்:
54, கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.

கீத் மருந்தகம்
ஆங்கில மருந்து
விற்பனையாளர்.
கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.

சபரிநாதன் மில்
ஸ்ரேசன் றோட்,
சுன்னாகம்.

பிள்ளையார் ஸ்ரோர்ஸ்
ஸ்ரேசன் றோட்,
சுன்னாகம்.


கே. எம். பி. மில்
ஸ்ரேசன் றோட்,
சுன்னாகம்.

இ. சுப்பிரமணியம்
அன். கோ.
கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.

முருகன் ஆபரண மகால்
Dr. சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

டயமண்ட்
றேடர்ஸ்
Dr. சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

பிறின்ஸ்
படப்பிடிப்பாளர்
கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.

பொன்னம்பலவாணர் இன்று
பவனி வரும் சித்திரத் தேர்

பொன்னம்பலவாணர்

## தேரேறி வருகிறார்; அழகு காண வாரீர்!

ஈழத்தின் முதல் தமிழ் இராஜதானியாகிய கதிரமலையில் உக்கிரராஜசிங்க மகாராஜாவினால் பூஜிக்கப்பெற்ற பழைமையும், பெருமையும், அருள் நிறைவும் உடைய ஸ்ரீ சுவர்ணாம்பிகை சமேத ஸ்ரீ பொன்னம்பலவாணர் சுவாமிக்கு பொது மக்களின் பெருமுயற்சியால் சென்ற வருடம் புதிதாக சித்திரத் தேர் அமைக்கப்பட்டு முதலாவது பவனி வந்தது. ரதச்சக்கரவர்த்தி 'கலாகேசரி' ஆறுமுகம் தம்பித்துரை அவர்களின் கைவண்ணத்தில் உருவாகிய இச் சித்திரத்தேர் இவ் வருடம் இரண்டாவது முறை பவனியாக வருவது அனைவருக்கும் திருவருள் பயப்பதாகும்.

தானே அனைத்திலும் நிறைந்திருந்து மேலேழுலகையும் கீழேழுலகையும் இயக்குபவர் என்பதை நடுநாயகமாக, தேரில் ஆரோகணித்தருளும் இறைவனும், நாம் அனைவரும் மனம் ஒன்று கூடி, உடல் ஒன்று கூடி, பலம் ஒன்று கூடி இறைவனின் ஆளுகைக்கு அகப்பட்டு தெய்வீக வாழ்வு வாழுகிறோம் என்பதை எல்லோரும் வடம்தொட்டு தேருரச் செய்யும் சிறப்பும் நிறைந்தது தேர்த்திருவிழா. அதனாலேயே அது விழாக்கள் அனைத்திலும் மிகுந்த அருளைத் தருவதாகும்.

இப்புனித வைபவத்தால் எல்லோருக்கும் அமைதியும், நிறைவும், உயர்வும் பொலிய ஸ்ரீ பொன்னம்பலவாணரைத் துதித்து வாழ்த்துகிறோம் சுபம்.

**பிரம்மஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள்**
ஆலயப் பிரதம குரு

## நல்லை ஆதீன முதல்வர் ஆசி

அருளோங்கும் சைவ மெய்யன்பர்களே!

சுன்னாகம் கதிரமலைச் சிவன் ஸ்ரீதேவஸ்தான ரதோற்சவம் நிகழ விருப்பதறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறோம். ஆலய விழாக்களில் அதி உயர் ஸ்தானம் வகிப்பது இவ் விழா.

தேவாலயத்திற்குள் சென்று வழிபட இயலாத அடியார்களுக்கும், தேரேறி வீதி உலா வந்து அருட் கடாட்சம் பொழியும் வைபவம்.

தேர் உலகத்தைக் குறிக்கும். ஆழ்ந்த தத்துவக் கருத்துக்களைத் தாங்கும் அமைப்பே தேராகும்.

மானிடப் பிறப்பின் முழு நோக்கு பரம் பொருளை அடைவதே. நிலையிலா வாழ்க்கையை நன்குணர்ந்து சிவப்பரம் பொருளின் திருவடிகளை இறுகப் பற்றிக் கொண்டால் இனிப் பிறவா நிலை பெற்று, அவரின் பாதார விந்தங்களில் நித்திய சாந்தி இன்பம் பெறலாம்.

## பக்தர்கள் பரவிட தேரேறும் எம்பெருமான்

ஆலயங்களில் நடைபெறும் உற்சவங்களில் தேர்த்திருவிழா மிக விசேடமானது. எம்பெருமான் திரிபுரம் எரிக்கத் தேரிலே எழுந்தருளினார் என்பது தேரின் மகத்துவத்தை விளக்குகிறது.

நடமாடும் ஆலயமாக விளங்குகின்ற தேர் ஆழமான தத்துவ விளக்கத்துக்கு ஏற்ற முறையில் அமைந்துள்ளது. தேரிலே அமைந்துள்ள சிற்பங்கள் இறைவனுடைய அளப்பருங் கருணையை விளக்குகின்றன.

தேர் சைவ மக்களுடைய கலைகளின் சிறப்பையும், முருகியல் உணர்வையும் எடுத்துக் காட்டுகிறது. கருங்கல்லிலே கவின்மிகு தேர்களை உருவாக்கிய பெருமை தமிழனுக்குண்டு.

இறைவனுடைய திருவிளையாடல்கள், ஆலயத்தின் சிறப்பு என்பன சிற்பங்களாக கலைஞனின் கைவண்ணத்தால் தேரிலே அமைக்கப்பட்டுள்ளன

அந்தணப் பெருமக்கள் வேதம் ஓத, பக்தர்கள் பஜனை செய்ய, நாதஸ்வரக் கலைஞர்களின் தெய்வீக இசை எவ்விடமும் பரவ பொன்னம்பலவாண சுவாமி சுவர்ணாம்பிகை சமேதராக தேரிலே எழுந்தருளி வரும் காட்சி அற்புதமானது.

தேரின் வடத்தைப் பிடித்து இழுத்து வீதிவலம் வருவது ஒரு புனிதமான பணி, என்பதால் பலரும் இவ் விழாவில் பக்தியுடன் பங்கு பற்றத் தவறுவது இல்லை. இன்று நடக்கும். தேர்த்திரு விழாவிலே பங்குபற்றி எம்பெருமான் அருள் பெறுவோமாக.

**திருமதி**
**ம. திருச்சிற்றம்பலம்,**
அதிபர்,
இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம்.


தேருரும் சிவன்
பதம் போற்றி!

ஏ. கே. எஸ். மில்
கே கே. எஸ். வீதி.
சுன்னாகம்.

துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ்,
[புகழ் பெற்ற புத்தக வியாபாரியும், பத்திரிகை முகவரும்]
சுன்னாகம்.

நா. வீ. கந்தையா
பத்திரிகை முகவர்,
சுன்னாகம்.

நாகம்ஸ் பாட்டா
சுன்னாகம்.

பவானி றேட்ஸ்,
இல. 16,
Dr. சுப்பிரமணியம் வீதி
சுன்னாகம்.

லக்சுமி விலாஸ்
சுன்னாகம் சந்தி.

றெவிவோய்ஸ் அன்
வீடியோ கொம்பிளக்ஸ்,
கே. கே. எஸ் வீதி,
சுன்னாகம்.

ஐயனார்
பலசரக்கு மாளிகை,
சுன்னாகம்.

சக்தி மருந்தகம்,
சுன்னாகம்.

சுந்தரம் பல் பொருள்
களஞ்சியம்
கே. கே. எஸ் வீதி,
சுன்னாகம்.



மலர் தயாரிப்பு:
எம். பாலகுமார்,
உதயன் சேவை நிலையம்,
சுன்னாகம்.



ப. நோ. கூ. ச. கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



## ★ ஹூட்ஸ் ஜக்குலின் ★
(அனித்தா)

மாகியம்பதியைச் சேர்ந்த ஞா. அகஸ்ரின் - மேரி கில்டா தம்பதிகளின் தவப்புதல்வி ஹூட்ஸ் ஜக்குலின் தனது பிறந்த நாளை இன்று [1-5-92] கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, ஞானத்தந்தை, ஞானத்தாய், பாட்டி, சித்திமார், மாமாமார், அத்தைமார், சித்தப்பாமார், உறவினர்கள் புனித சூசையப்பர் அருளோடு பல்கலையும் கற்று, பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

[4698]

---

தவப்புதல்வி

## திருமதி ஜெ. சிவகௌரி அம்மனின் 200 ஆவது நாள் நினைவலைகள்

மண்ணில்: 10.762 நாள்

விண்ணில்: 200 நாள்

அணைந்தது எங்கள் அன்புத் தீபம் - என்றும் அணையாதது எங்கள் நினைவுத் தீபம்
மறைந்தது எங்கள் கௌரி தீபம் - என்றும் மறையாதது அவரின் நினைவலைகள்.

அவரின் நினைவலைகளில்
சிக்குண்ட இதயங்கள்.

நியோ குடும்பத்தினர்,
யாழ்ப்பாணம்.

[20799]

---

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



என்றும் வாடாத அன்பு மலர்
செல்வன்

## தணிகாசலம் ஜெகேசன்
(லெப்டினன்ட் ரம்போ)

தாயின் மடியில்: 03-06-1969

தாயக மண்ணில்: 01-05-1989

எமது அன்புச் செல்வமே ஜெயா! நீர் எங்களைப் பிரிந்து ஆண்டு மூன்று சென்றாலும். என்றும் எங்கள் உள்ளங்களில் உமது அன்புமுகம் நிறைந்திருக்கும். உமது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர், அன்புக்குரியவர்கள்.

பத்திரகாளி கோவில் வீதி,
பருத்தித்துறை.

[20726]

---

## சிறுதானியம்

தெல்லிப்பழை மே. 01

தற்போது பெய்த மழையைப் பயன்படுத்தி இப்பகுதி விவசாயிகள் நிலத்தைப் பண்படுத்தி சிறுதானியங்களை விதைத்துள்ளனர். [இ-68]

## ஊறணியில் 20 வீடுகள்

வல்வெட்டித்துறை ஊறணியில் நகர சுத்திகரிப்பு தொழிலாளர்களுக்கு, இருபது நிரந்தரக் குடியிருப்பு வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

வல்வை நகரசபை. ஊறணி வைத்தியசாலை தொழிலாளர்களுக்கு இந்த வீடுகள் அமைக்கப்படுவதாகவும், விரைவில் இவ் வீடுகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் வடமராட்சி தமிழர் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் இரா. சிவச்செல்வம் தெரிவித்தார். [ஒ-165]

---


Personal New Science Centre

Elilakam Front Lane,
Jaffna.

கணித, உயிரியல், விஞ்ஞானப் பிரிவுக்குரிய

92 A/L Paper Classes

பிரிவு — 2

[எமது வழமையான தனித்துவமான ஆசிரியர் குழு]

ஆரம்பம்:
03-05-1992 (ஞாயிறு)

(நேர அட்டவணை நிறுவனத்தில் பெறலாம்.)

[சி-2245]

---

92 ஆம் ஆண்டுக்கான
வினா-விடை வகுப்பு
(PAST PAPERS)

ஆரம்பம்:
02-05-1992

இரசாயனவியல் —
Mr நாகரத்தினம் B. Sc.
Sat. & Sun 12—1 p m.

பௌதிகவியல் —
Mr. ஜெயசீலன் B.Sc.
Sat. & Sun 1—2 p m.

தூய/பிரயோக கணிதம்
Mr. கணேசன் B.Sc.
Sat. & Sun. 2—4 p. m.

93
அசேதன இரசாயனம்

ஆசிரியர்:
Mr. நாகரத்தினம் B.Sc.

பிரிவு-I Sat. & Sun.
6-00 — 7-30 a.m.

பிரிவு - II Sat. & Sun.
9-30 — 11 a.m.

'A' LEVEL CENTRE

பருத்தித்துறை வீதி,
1ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

[இ-2238]

---

சுன்னாகத்தில் கைத்தறி உற்பத்திகள்

வாருங்கள்! பாருங்கள்!! வாங்குங்கள்!!!
கைத்தறி புடைவைகள் உண்டு.
நியாயமான விலை. உள்ளூர் உற்பத்திக்கு உதவுங்கள்.

யா. மா. புடைவை நெசவாளர் சங்கம்,
டாக்டர். சுப்பிரமணிய வீதி, சுன்னாகம்.

[சி-2454]


---

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணுலகில்: 16 - 10 - 1909

விண்ணுலகில்: 27 - 04 - 1987

திதி: 01 - 05 - 1992

## அமரர் கந்தையா நாகலிங்கம்
[நாகேஸ்வரி வித்தியாசாலை ஸ்தாபகரும், முன்னாள் இளைப்பாறிய அதிபரும்]

அணையாத எம் குல விளக்கே!
நல்ல நூல் நிலையம் சென்று
நாம் பெற முடியாப் பண்பை
சொல்லரும் முறையில் சொல்லி
செழிப்புற எமை வளர்த்த
நல்ல தோர் ஆசான் நீங்கள்
நமைப் பிரிந்தமை சகிக்கலாமோ.

உங்கள் பிரிவுத் துயரால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பழைய பொலீஸ் நிலையத்தடி.
சுன்னாகம்.

[சி-2453]

---

## 100 ஆவது பிறந்த தின ஞாபகார்த்தம்



தோற்றம்: 02 — 05 — 1892

மறைவு: 06 — 12 — 1986

## அமரர் S. பிரான்சீஸ்
[யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி ஓய்வு பெற்ற ஆசிரியர் / முன்னைநாள் விடுதி மேற்பார்வையாளர்]

நாளை (02-05-1992) காலை 6-30 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

பிள்ளைகள்:

திருமதி பாக்கியம் அழகையா,
அருட்தந்தை F. J. நவரட்ணம் O. M. I.
[பிலிப்பைன்ஸ்]
திரு. F. C. வேதநாயகம்,
திருமதி யொய்சி அன்ரனிப்பிள்ளை,
திரு. F. R. F. அருள்சோதி,
திருமதி யசிந்தா அன்ரன் [பிரான்ஸ்],
மற்றும் பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

5/1, அச்சக வீதி,
யாழ்ப்பாணம்.

[20783]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### மே நாளில்....

இன்று மே நாள். உலக உழைப்பாளர் தினம். தொழிலாளர்களின் அடிமை விலங்கு உடைத்தெறியப்பட்டதைக் கொண்டாடும் நாள். உழைப்பவனின் சக்தியும் வளங்களும் சூறையாடப்பட்டதை எதிர்த்து நடந்த போராட்டத்தில் — இரத்தம் நனைந்த போராட்டத்தில் — கிடைத்த வெற்றியை — விடுதலையை — நினைவு கூரும் நாள்.

106 வருடங்களுக்கு முன்னர் நிலவிய அடிமை நிலையில், உரிமைகள் இல்லாத நிலையில் இன்றைய தொழிலாளர்கள் இல்லை என்பது ஏதோ உண்மைதான். ஆனால் உலகத் தொழிலாளர்கள் — பூகோளத்தின் எந்த பகுதியிலும் — பூரண விடுதலை பெற்றவர்களாக இல்லை.

அனேகமாக எல்லா நாடுகளிலும் ஏதோ ஒரு வகையில் தொழிலாளர்கள் தமது உரிமைகளுக்காகப் போராடுவதைக் காண முடிகிறது. பொறுப்பை உணர்ந்து கடமையைச் செய்யாமல் உரிமை கேட்கும் போராட்டங்களும் இவற்றில் அடங்குகின்றன!

இத்தகைய சூழ்நிலையில் — இன்றைய காலகட்டத்தில் — தமிழீழத் தொழிலாளர்களின், உழைப்பாளர்களின் நிலை பல்வேறு பரிமாணங்களைக் கொண்டதாக உள்ளது.

தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டம் நடந்து கொண்டிருக்கும் காலம் இது. விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதற்கு — ஒடுக்குவதற்கு — இராணுவ வல்லமையை மட்டுமன்றி மற்றும் பல அழுத்தங்களையும் ஸ்ரீலங்கா அரசு பயன்படுத்தி வருகிறது.

தொழிலாளர்களின் உழைக்கும் உரிமைகளைப் பறித்து உற்பத்தியை கெடுத்துப் பொருளாதாரக் கட்டமைப்பை பலவீனமாக்குவதற்கு அரசு முயல்கிறது. அதனால் தமிழீழ உழைக்கும் மக்கள் தொழில் இழந்து நிர்க்கதிக்கு ஆளாகிப் பரிதவிக்கின்றனர்.

விவசாய நிலங்களைக் குண்டு வீசியும், பாதுகாப்பில்லாத இடங்களாக்கியும், விவசாயிகளின் உழைப்புரிமையும், வாழ்வுரிமையும் பறிக்கப்பட்டுள்ளன. அதே போல கடலில் தொழில் செய்யத் தடை விதித்து, தொழிலுக்குச் செல்வோரைக் கொன்று, பயமுறுத்தி அவர்களின் உழைப்புரிமை பறிக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலைகள் சேதமாக்கப்பட்டும், மின்சாரம் நிறுத்தப்பட்டும் அத்துறை சார்ந்த தொழிலாளர்கள் நட்டாற்றில் விடப்பட்டுள்ளனர்.

இந்த நிலை நீங்குவதற்கு விடுதலைப் போராட்டத்தில் வெற்றி காணவேண்டியது அவசியமாகிறது. எனவே இன்றைய மே நாள், தமிழீழ உழைக்கும் மக்கள், விடுதலைப் போராட்டத்துடன் ஒன்றிணைந்து, ஒரே அணி திரண்டு நிற்கிறார்கள்; போராட்டத்தில் சங்கமித்து நிற்கிறார்கள் என்பதை ஸ்ரீலங்கா அரசுக்கும், உலகத்துக்கும் காட்டுவதாக அமைய வேண்டும்.

தமிழீழ உழைப்பாளர் பெருமக்களின் விடுதலைக்கான அறைகூவல் நாளாக அமைய வேண்டும்; அரசியல், பொருளாதார, தொழிலாளர் உரிமைகளை வென்றெடுப்பதற்கான எழுச்சி நாளாகப் பரிணமிக்க வேண்டும்.

# பேரணியில் கலந்து கொள்வோர் கூடும் இடங்கள்

யாழ்ப்பாணம், மே 1

இன்றைய பேரணியில் கலந்து கொள்ளும் ஒவ்வொரு பிரிவுகளுக்கும் இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் பேரணி ஆரம்பமாவதற்கு முன்னர் ஒவ்வொரு பிரிவும் கூட வேண்டிய இடம் மற்றும் இப் பிரிவுகளுக்கான வாகன தரிப்பிடங்கள் ஆகியவையும் அறிவிக்கப்பட்டுள்ளன.

வாகன தரிப்பிடங்கள் அடைப்புக் குறிக்குள் எழுதப்பட்டுள்ளன.

1. கூட்டுறவுத்துறை விளையாட்டுக் கழகங்கள் — இராமநாதன் கல்லூரி உட்பகுதி [நாச்சிமார் கோவிலடி, காங்கேசன்துறை வீதி யாழ். நோக்கி].

2. ஆசிரியர்கள் கல்விப் பகுதி — உடுவில் கல்விக் கோட்டம் பணிமனை உட்பகுதி.

3. உள்ளூராட்சித் திணைக்களம் சுகாதாரப் பகுதி — உடுவில் திறந்த வெளி அரங்கில்.

4. வங்கி ஊழியர்கள் — இராமநாதன் கல்லூரி உட்பகுதி.

5. குடிசார் பொறியியல் துறை போக்குவரத்து — சிறுவர் விடுதி மருதனார்மடம்

6 ஆய்வு நிறுவனம் — இராமநாதன் கல்லூரி பெண்கள் விடுதி உட்பகுதி.

7. தொழிற்சங்கங்கள் — உடுவில் மகளிர் கல். உட் பகுதி.

8. தென்மராட்சிப் பிரிவு — இணுவில் புகையிரத கடவை [திருநெல்வேலி சிவன் கோவில் சந்தி].

9. யாழ் / நல்லூர் பிரதேசம் — அண்ணா பாம் முன்பாக, உரும்பராய் வீதி [நாச்சிமார் கோவிலடி காங்கேசன் வீதி யாழ். நோக்கி].

10. வடமராட்சிப் பிரிவு, வடமராட்சி வடகிழக்கு, கடற்புலிகள் பிரதேசம் — சுன்னாகம் காவற்துறை நிலையம் முன்பாக [சுன்னாகம், புத்தூர் பிரதான வீதி] [பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி மருத்துவ பீடம் முன்பாக].

11 தெல்லிப்பளைப் பிரதேசம் — சுன்னாகம் சந்தியில் இருந்து பின்நோக்கி காங்கேசன்துறை வீதி [நாச்சிமார் கோவிலடி காங்கேசன் துறை வீதி].

12. பண்டத்தரிப்பு பிரதேசம் மற்றும் பிரதேசங்கள் — கந்தரோடை வீதி, சுன்னாகம் காங்கேசன்துறை வீதி].

13. நீதி நிர்வாகப்பிரிவு — சுன்னாகம் பஸ் நிலையம் மின்சந்தை [காங்கேசன்துறை வீதி].

14. சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில் பிரதேசங்கள் வலி - வடக்கு கடற்புலிகள் பிரதேசம் — உடுவில் மகளிர் கல்லூரி முன்பாக [காங்கேசன் துறை வீதி].

15. தீவகப் பிரிவு பலாலி வீதி வழியாக உரும்பராய் சந்தியிலிருந்து பின்நோக்கி [யாழ். பல்கலைக்கழக மைதானம்].

16. கோப்பாய் பிரதேசம் — புன்னாலைக் கட்டுவன் சந்தியில் இருந்து உரும்பராய் சந்தி முன்நோக்கி [பொற்பதி வீதி].

மற்றும் சகல வாகனங்களும் யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் நிறுத்தப்படும் என்றும் — யாழ். தொழில் நுட்பக் கல்லூரி மைதானம், கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானம், திருநெல்வேலிச் சந்தை, திருநெல்வேலி சிவன் கோவில் ஆகிய இடங்களில் சைக்கிள்கள் நிறுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

## பேரணி செல்லும் பாதையில் முதலுதவி நிலையங்கள்

யாழ்ப்பாணம், மே 1

மேதினப் பேரணியில் செல்லும் மக்களின் வைத்திய நலன் கருதி சென் ஜோன்ஸ் முதலுதவிப் படையினரதும் சாரணர்களினதும் முதலுதவி நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

அவற்றோடு நடமாடும் முதலுதவிச் சேவைப் பிரிவும் இன்று பேரணிப் பாதைகளிலும், கூட்ட மைதானத்திலும் சேவையில் ஈடுபடும்.

முதலுதவி நிலையங்கள் நிறுவப்பட்டுள்ள இடங்கள் வருமாறு:-

★ இணுவில் வைத்திய சாலை முன்பாக.
★ கோண்டாவில் உப தபால் நிலையம்.
★ கொக்குவில் இந்துக் கல்லூரி.
★ குளப்பிட்டிச் சந்தி.
★ நாச்சிமார் கோவிலடி.
★ பிறவுண் வீதி விடுதி முன்பாக.
★ பல்கலைக் கழக மைதானம். [அ]

## வாகனங்களை சேவையில் ஈடுபடுத்த கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 1

இன்றைய மே தினப் பேரணியிலும், பொதுக் கூட்டத்திலும் கலந்து கொள்ளும் மக்களின் நலன் கருதி வாகன உரிமையாளர்கள் அனைவரும் தமது வாகனங்களைச் சேவையில் ஈடுபடுத்த வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது

பேரணியில் கலந்து கொள்ளும் மக்களின் வசதிக்காக பேரணி செல்லும் பாதையில் தாக சாந்தி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பேரணியில் கலந்து கொள்ளும் மக்களின் நலன் கருதி இன்று தேநீர்க் கடைகளையும், சைக்கிள் திருத்தும் நிலையங்களையும் மற்றும் வாகன ரியூப் ஒட்டும் நிலையங்களையும் திறக்கும்படியும் கோரப்பட்டுள்ளது. [இ]

## உயிரிழந்த தமிழர்கள் எண்ணிக்கை 56 ஆக உயர்வு

பொலன்னறுவ மாவட்டத்தில் முஸ்லிம்கள் நடத்திய தாக்குதலில் உயிரிழந்த தமிழர்களின் எண்ணிக்கை குறைந்தது 56 ஆக அதிகரித்துள்ளது என்றும் —

இந்த எண்ணிக்கை 70 ஆக அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுவதாகவும் வெளிநாட்டு வானொலி அறிவித்துள்ளது.

இன்னொரு தமிழ்க் கிராமத்தில் இருந்து கடத்திச் செல்லப்பட்ட 12 தமிழர்களின் [illegible] தெரிவிக்கப்படுகிறது.

(இ-எ)

## இலட்சியத்தில் உறுதி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யானவன் கங்கணங்கட்டி நிற்கின்றான். எமது பாட்டாளி வர்க்கம் மீது மிகவும் கொடூரமான ஒரு பொருளாதார யுத்தம் ஏவிவிடப்பட்டுள்ளது.

### ஆளும் வர்க்கத்தின் தந்திரோபாயம்

ஒரு மக்கள் சமுதாயத்தின் பொருளாதார வாழ்விற்கு மூலாதாரமான உழைப்புச் சக்தியை முடக்கிவிட்டால், அந்த மக்களின் மனவுறுதியை, ஆன்ம திடத்தை, போராட்ட உறுதியை உடைத்தெறிந்து விடலாம் என்பது சிங்கள ஆளும் வர்க்கத்தின் தந்திரோபாயம். இது எல்லாக் காலத்திலும், எல்லா சமூகங்களிலும், எல்லா அடக்குமுறையாளர்களாலும் கையாளப்படும் ஓர் ஒடுக்குமுறை யுக்தி. எமது எதிரியும் நீண்டகாலமாகவே இந்த அணுகுமுறையைக் கடைப்பிடித்து வருகிறான். இதன் ஒட்டுமொத்த விளைவாக உழைத்து வாழும் எமது மக்கள் சந்தித்த சோகம் நிறைந்த வரலாற்றைச் சொற்களால் விவரிக்க முடியாது.

போராட்டப் பளுவை ஒரு தோளிலும், பொருளாதாரப் பளுவை மறு தோளிலுமாக, உறுதி தளராது சுமந்து நிற்கும் தமிழ்ப் பாட்டாளி வர்க்கத்தை நான் பாராட்டுகிறேன்.

### மலையாக நிற்கும் எமது மக்கள்

புயலாகச் சீறும் எதிரியின் அடக்குமுறை அழுத்தங்களை எல்லாம் மலையாகத் தாங்கிநிற்கும் எமது மக்களை நான் பாராட்டுகிறேன்.

சாவுக்கும் அழிவுக்கும் அப்பால், பசிக்கும் பஞ்சத்திற்கும் அப்பால், சுயநல வாழ்வின் சுக போகங்களுக்கும் அப்பால், ஒரு சுதந்திரமான கௌரவமான வாழ்வில் காதல் கொண்டு நிற்கும் எமது மக்களின் இலட்சியப் பற்றை நான் பாராட்டுகிறேன்

### விடுதலைப் பயணம்

கல்லும் முள்ளும், ஏற்றமும் இறக்கமும் நிறைந்த மிகவும் கடினமான பாதையூடாக எமது விடுதலைப் பயணம் தொடர்கிறது.

எதிரியானவன் இந்தப் பாதை வழியே மேலும் முட்டுக்கட்டைகளைப் போடலாம்; எமது பயணத்தில் சோர்வையும் களைப்பையும் ஏற்படுத்த இடையூறுகளை விளைவிக்கலாம். எத்தனை தடைகள் ஏற்பட்ட போதும், எத்தனை துன்பங்கள் ஏற்பட்ட போதும், கொண்ட கொள்கையில் நம்பிக்கையும் அந்த நம்பிக்கையின் அத்திவாரத்தில் கட்டப்பட்ட உறுதியும், அந்த உறுதியின் நெருப்பாக எரியும் விடுதலை வேட்கையும் எம்மிடம் உள்ள வரை எமது இலட்சியப் பயணம் வெற்றியில் முடியும் என்பது நிச்சயம்.

ஒரு விடுதலைப் போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தின் பங்கு பிரதானமானது. தமிழீழப் பாட்டாளி வர்க்கமானது, ஒருபுறம் முதலாளித்துவ சுரண்டல் முறையையும், மறுபுறம் இனவாத ஒடுக்குமுறையையும் சந்தித்து நிற்கிறது. இந்த இரு தலைப்பட்ச முரண்பாட்டில் இனவாத ஒடுக்குமுறையே பிரதானமானது

இன ஒடுக்குமுறையைத் தனது பிரதான எதிரியாகச் சந்தித்து நிற்கும் தமிழீழப் பாட்டாளி வர்க்கம் அந்த இன ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடுவதையே தனது முதன்மையான பணியாகக் கொள்ளவேண்டும். ஏனென்றால், இன ஒடுக்குமுறையானது தமிழ்ப் பாட்டாளி வர்க்கத்தின் வாழ்க்கையையே சீரழிக்க எத்தனிக்கிறது. எனவே, இன ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடுவது தவிர்க்கமுடியாத வரலாற்று நிர்ப்பந்தமாக எழுந்துள்ளது. இந்தப் போராட்டமானது வர்க்கப் போராட்ட வரம்புகளுக்கு அப்பால், ஒரு தேசிய போராட்டமாக, தேசிய மக்களின் போராட்டமாக, தேசிய வர்க்கங்களின் ஒன்றிணைந்த போராட்டமாக உயர் வடிவம் பெறுகிறது. ஒரு தேசிய விடுதலை இயக்கத்துடன் அணிசேர்ந்து கொள்வதன் மூலமே தமிழீழத் தொழிலாளர் வர்க்கம் தேசிய போராட்டத்திற்கு உருப்படியான முறையில் பங்களிக்க முடியும். இதுவே எமது உழைக்கும் மக்களின் விடிவிற்கும் விமோசனத்திற்கும் வழிகோலும்.

### நேசக்கரம் நீட்டுகிறோம்

சிங்களப் பாட்டாளி வர்க்கத்திற்கு நாம் எமது நேசக்கரத்தை நீட்டி நிற்கிறோம். சிங்கள ஆளும் வர்க்கத்தால் ஒடுக்கப்பட்டு, நசுக்கப்பட்டு, சுரண்டப்பட்டு வரும் சிங்களப் பாட்டாளி மக்களை நாம் ஒரு நேச சக்தியாகவே கருதுகிறோம்.

தமிழ் சிங்களப் பாட்டாளிகள் மத்தியில் வர்க்க ஒருமைப்பாடு ஏற்படுவதானால், தமிழரின் தன்னாட்சி உரிமையை சிங்களத் தொழிலாளர் வர்க்கம் அங்கீகரிக்க வேண்டும்; தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்க வேண்டும். ஆனால் அதேசமயம் தென்னிலங்கைப் பாட்டாளி வர்க்கமானது சிங்கள - பௌத்த பேரினவாத ஆட்சியமைப்பிற்கு முண்டு கொடுத்து நிற்கும் வரை தமிழ் - சிங்கள வர்க்க ஒருமைப்பாடு சாத்தியமாகப் போவதில்லை.

பேரினவாத சித்தாந்தப் பிடியிலிருந்து விடுதலை பெற்று விழிப்புணர்வு அடையும் பொழுதுதான் தமிழரின் சுதந்திரப் போராட்டத்தின் புரட்சிகரத் தன்மையைச் சிங்கள மக்கள் புரிந்துகொள்வார்கள். தமிழரின் விடுதலையில்தான் தமக்கும் விமோசனம் உண்டு என்ற உண்மையை உணர்ந்துகொள்வார்கள்.

பாட்டாளி வர்க்கத்தின் எழுச்சி தினமாகிய இன்று நாம் ஒரு விதி செய்துகொள்வோம்.

எத்தகைய சவால்களை எதிர்கொண்ட போதும் எமது இலட்சியப் பயணத்தில் உறுதி தளர மாட்டோம். என வீர சபதம் செய்வோம். — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

[அ-உ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாவட்டத்திலுள்ள
உள்ளூராட்சி, சுகாதார பகுதிகளைச்
சார்ந்த ஊழியர்களுக்கான

## வேண்டுகோள்

மேநாள் பேரணியில் கலந்துகொள்ள இருக்கும் ஊழியர்கள் அனைவரும் 12.30 மணிக்கு முன்பாக திரண்டுவந்து மேற்படி பகுதிகளைச் சார்ந்த ஊழியர்களுக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் மருதனார்மடம் சந்தி உடுவில் திறந்தவெளி அரங்குப் பகுதியினுள் கூடுமாறு கேட்டுக்கொள்வதோடு மேதின ஏற்பாடுகள் சிறப்பாக அமைய பூரண பங்களிப்பையும் ஒத்துழைப்பையும் நல்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

வலி மேற்கு பிரதேச சபை
ஊழியர்கள்.

[20811]

## 3rd DEATH ANNIVERSARY
of
## R. W. SUMANAPALA I.P

"Every One's Death is of The
Same Quality as Himself
To the Enemy of God an Enemy
To the Friend of God a Friend"

Fondly Remembered By
WIFE, RELATIVES
AND FRIENDS.

Chavakachchery.
[20805]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### செல்வி பஞ்சாட்சரலிங்கம் துஷாந்தி

[முன்னாள் யா/நல்லூர் சென் பெனடிக் பாடசாலை, மாணவியும், யா/இந்து மகளிர் பாடசாலை மாணவியும்]

மலர்வு:
17-9-1981

உதிர்வு:
1-4-1991

கட்டி அணைத்து நீ முத்தம் கொடுத்ததும்!
கவலைமறந்து நாம் உள்ளம் மகிழ்ந்ததும்!
சுட்டிச் செயல்கள் செய்து காட்ட — நாம்
சூழ இருந்து சிரித்து மகிழ்ந்ததும்
சிட்டுக் குருவியென சிறகை விரித்து நீ
சிங்கார நடனம் செய்து காட்டவும்
பட்டுச்சட்டையும் பொட்டிட்ட முகமும்
கொட்டும் சிரிப்பும் கொள்ளைப் பேச்சும்
துள்ளிச் சென்று நீ பள்ளி செல்லுகையில்
''போயிற்று வாறேன் அம்மா'' என்றதும்
— எல்லாம்
எண்ண முடியுதில்லை நெஞ்சில் இரத்தம் பாயுதடி
அள்ளி உனக்கொரு கொள்ளியிட்டோம் -
ஆனால் அம்மா
இட்ட நெருப்பில் நித்தம் எம்மை எரிக்கின்றோம்.

ஆ. பஞ்சாட்சரலிங்கம்
[கமலேஸ்வரி ஸ்ரோர்ஸ்]
49, மூத்த விநாயகர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
[20806]

அம்மா, அப்பா,
கிருஷாந்தி,
கோபிரமணன்,
கோபிராஜ்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 01-5-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## மேதின அழைப்பு

யாழ்ப்பாணம், மே 1
விடுமுறையில் நிற்கும் அனைத்து பல்கலைக்கழக மாணவர்களும் தத்தமது பகுதிகளில் இருந்து மேதின ஊர்வலத்தில் இணைந்து கொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

### தொழில் நுட்ப கல்லூரி

மேதினப் பேரணியில் கலந்து கொள்வதற்காக அனைத்து மாணவர்களையும் இன்று வெள்ளி நண்பகல் ஒருமணிக்கு கல்லூரியில் கூடுமாறு கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி மாணவர் அவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

### சிகை அலங்கரிப்பாளர் சங்கம்

மேதினத்தை ஒட்டி இன்று வெள்ளி குடாநாட்டில் உள்ள அனைத்து சிகை அலங்கரிப்பு நிலையங்களையும் மூடிவிடுமாறும் - ஊர்வலத்தில் பங்கு கொள்ள வசதியாக அனைத்து சிகை அலங்கரிப்பாளர்களையும் இன்று நண்பகல் 12 மணிக்கு காரியாலயத்தில் கூடுமாறும் வடபிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கங்களின் சமாசம் கோரி உள்ளது.

### அதிபர்கள் ஆசிரியர்களுக்கு

திட்டமிட்டபடி கோட்ட ரீதியாக சகல அதிபர்களும் ஆசிரியர்களும் முன்னரே தீர்மானிக்கப்பட்ட கொத்தணிப் பாடசாலைகளுக்கு பகல் 12 மணிக்கு முன்னதாகச் சமூகம் கொடுக்கும்படியும் —
பேரணியில் கலந்து கொள்வதற்காக இராமநாதன் கல்லூரி கோட்ட வளவில் கூடுமாறும் கோரப்பட்டுள்ளது.

### லங்கா சிமெந்து ஊழியர்,

லங்கா சிமெந்து நிறுவனத்தின் பாதிக்கப்பட்ட தொழிலாளர் சங்க உறுப்பினர்கள் அனைவரும் இன்று வெள்ளி நண்பகல் 12 மணிக்கு சுன்னாகத்தில் உள்ள காரியாலயத்தில் கூடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

### பனை அபிவிருத்திச் சபை

மேதினப் பேரணியில் கலந்து கொள்வதற்கு வசதியாக நண்பகல் 12 மணிக்கு முன்பாக சபையின் சுன்னாகம் உற்பத்தி நிலையத்துக்கு வந்துசேருமாறு பனை அபிவிருத்திச் சபை தனது அங்கத்தவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது. (இ-30)

### யாழ்ப்பாணத்தில்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
மடத்தில் இருந்து யாழ். பல்கலைக் கழகம், வரையிலான பகுதிகள் எங்கும் சிவப்பு — மஞ்சள் வண்ணக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு எழிற்கோலம் மிளிருகிறது.
வீதி நெடுகிலும் பந்தல்களும் பதாகைகளும், சுவரொட்டிகளும் காணப்படுகின்றன.
பேரணியில் வரும் மக்களின் தாக சாந்திக்காக தண்ணீர்ப் பந்தல் அமைக்கப்பட்டுள்ளன.
மக்கள் உணர்வைப் பிரதிபலிக்கும் சித்திரங்களைக் கொண்ட ஊர்திகள் பலவும் பேரணியில் எடுத்து வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
(இ-31)

## இன்றைய உற்சவங்கள்

ஆனைக்கோட்டை அருள்மிகு கரைப்பிரான் ஆதிவிநாயகர் கோவில் தேர்த்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 7மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகும். காலை 10 மணிக்கு இரதோற்சவம் நடைபெறும். தீர்த்தோற்சவம் மறுநாள் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும்.

★ ★ ★

யாழ்ப்பாணம் வண் - வடமேற்கு கேசாவில் முந்து விநாயகர் கோவில் 1008 சங்காபிஷேக விழா இன்று காலை 7 மணிக்கு ஆரம்பமாகும். பகல் 11 மணிக்கு சங்காபிஷேகம் இடம்பெறும்.

யாழ். கனகரத்தினம் ம. ம. வி.
(ஸ்ரான்லி கல்லூரி)

### க. பொ. த. [உயர்தரம்] 1994
### அனுமதி

விஞ்ஞானம், கணிதம், கலை, வர்த்தகம் ஆகிய பிரிவுகளுக்கு தகுதி பெற்றுள்ள மாணவர்கள் 1992 05 09 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

மு. இராமலிங்கம்,
அதிபர்.

(20790)

## மரண அறிவித்தல்கள்

### தில்லைநாதன் ஞானரத்தினம்

தலையாழி வண்ணார்பண்ணை கிழக்கைச் சேர்ந்த திருமதி தில்லைநாதன் ஞானரத்தினம் காலமானார். அன்னாரது ஈமைக்கிரிகைகள் வியாழக்கிழமை (30-04-92) நேற்று நடைபெற்றன.
இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி R. யோகராணி,
(மகள்)

958/30 தலையாழி ஒழுங்கை,
வண்ணார்பண்ணை கிழக்கு,
யாழ்ப்பாணம்.
[20810]

### முருகேசு இராசரத்தினம்

[ஓய்வு பெற்ற பிஸ்கால் உத்தியோகத்தர்]

கட்டப்பிராயை பிறப்பிடமாகக் கொண்டவரும், குப்பிளானை வதிவிடமாகக் கொண்டவருமான முருகேசு இராசரத்தினம் காலமானார்
அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [01-05-92] பிற்பகல் 3.30 மணிக்கு குப்பிளானில் நடைபெறும்.

தகவல்:
த. சாந்தகுலநாதன்
[பேறாமகன்]

குப்பிளான்.
[20809]

### திருமதி கந்தையா மனோன்மணி

புங்குடு தீவு முதலாம் வட்டாரத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது 93/23 இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கையில் வசித்து வந்தவருமாகிய திருமதி கந்தையா மனோன்மணி 30-4-92 இல் காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற கதிர்காமர் தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை கந்தையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அமரர் சண்முகம், கொழும்பில் வசித்து வரும் திரு. செல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரியும், தனலக்ஷ்மி, ஏரம்பு[ஓய்வு பெற்ற அதிபர்], இராசம்மா, ஞானம்மா, சந்திரசேகரம், ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சுப்பிரமணியயம், சுந்தரமூர்த்தி, சின்னம்மா, வரராசசிங்கம், ஞானம்மா ஆகியோரின் அன்பு மாமியாரும், சர்வானந்தன். அருந்ததி, திருமதி அகிலேஸ்வரி பரமலிங்கம், வீரசிங்கம் வரதலக்ஷ்மி, விஷ்ணுகுமார்; பிரேமாவதி, குமாரதாஸ் அருணாதேவி, ஸ்ரீதரன், சாந்தினி, பிரபாகரன் மதிவதனி, பாலச்சந்திரன் [மாவீரர் அருண்], சிவானந்தன் கலாராணி, இரவீந்திரன் இரசனி, உமாசரன் புவனஇராசேஸ்வரி, சிவகுமார், பரணீதரன், திலீபன், திருமதி கவிதா செந்தில்முருகன், கலையரசி, எழிலரசி, சாருலதா [போராளி கௌதமி], திருமதி விஜிதா அருன்பிரபாகர், சுகந்தினி ஞானசேகரம் இவர்களின் அருமைப் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு 02-05-92 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு கோம்பையன் மணல் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
வே. க. ஏரம்பு.

93/23, இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
[20812]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org